பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 09 | ஞாயிற்றுக்கிழமை | 23.03.2025 | அதிர்வு 230

## கிளிநொச்சியில் ஹெரோயினுடன் மூன்று பேர் கைது!



கிளிநொச்சி, பரந்தன், குமரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை 06

# குட்டித் தேர்தலிலும் எங்களுக்கே வெற்றி

### ஜே.வி.பியின் செயலர் ரில்வின் நம்பிக்கை



“போர் வெற்றி மற்றும் மின்சாரக் கதிரை என்பவற்றைக்கூறி வாக்கு வேட்டை நடத்திய காலம் மலையேறிவிட்டது. எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும்.”

– இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- 06



# நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் ரணில் உதவுவார்!

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

“நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில்எவ்விதநிபந்தனையும்இன்றி தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகவே இருக்கின்றார். பட்டலந்த ஆணைக்குழுஅறிக்கையைமுழுமையாக வாசிப்பவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வேலைத்திட்டங்களில் இருந்து வெளியேறுவார்கள்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். 07

# நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்றுகின்றது அநுர அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



மக்களைத் தவறாக வழிநடத்தும் ஏமாற்று வேலைத்திட்டங்களையே தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு களுத்துறை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 06




வழமைக்கு மாறாக இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் தாயகப் பகுதியில் அதிக எண்ணிக்கையான தரப்புக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன. அதுவும் முக்கியமான ஓரிரு கட்சிகளின் வேட்பு மனுக்கள் பெரும் எண்ணிக்கையில் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றமை அக்கட்சிகளுக்கு அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவுதான். அந்த ஆதங்கத்தில் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராக அவர்கள் கருத்து வெளியிடுகின்றமை புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆயினும், அந்த விடயத்தில் எல்லை தாண்டாமல் – வாக்காளர்களை முட்டாள்களாக்காமல் – கருத்து வெளியிடுவது முக்கியமாகும்.

தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் யாழ் மாநகர முதல்வர் வேட்பாளராகக் களம் இறங்க முயன்றவர் வி.மணிவண்ணன. அவரின் அணியினுடைய வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையால் அவரது கனவு இப்போது சிக்கலில் சிக்குண்டுள்ளது.

அந்த ஆதங்கத்தில் அவர் 06





# வடக்கு எல்லாவற்றிலும் பின்னுக்கு இருக்கக்கூடாது

## நாங்களாகவே முன்னேற வேண்டும் என்று ஆளுநர் அறிவுறுத்து

“வடக்கு மாகாணம் தொடர்ந்தும் எல்லாவற்றிலும் பின்தங்கிய நிலையில் இருக்க முடியாது. நாங்களும் முன்னேற வேண்டும். இங்குள்ள சிறுதொழில் முயற்சியாளர்கள் முன்னேறி எமது மாகாணத்துக்குப் பெருமையைத் தேடித் தர வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான “கிளி முயற்சியாளர் சந்தை” நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சந்தைக் கட்டடத்துக்கான நிதியுதவியை ஒபர் சிலோன் நிறுவனம் வழங்கியிருந்தது.

சந்தையைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய ஆளுநர்,

“சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான சாதகமான சூழல் உருவாகி வருகின்றது. இவர்களுக்கான சந்தைப்படுத்தல் கடந்த காலங்களில் மிகப்பெரும் சவாலாக இருந்தது. இப்போது வெளிநாடுகளுக்கு கூட ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாம் எதிலும் வெற்றியடைய தூரநோக்கு இருக்க வேண்டும். உங்களுக்கு அது இருக்கின்றமையை வரவேற்றுப் பாராட்டுகின்றேன். உங்களுக்கு மேலும் பல வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மிகச் சிறந்த தலைமைத்துவம் கிடைத்திருக்கின்றது. உங்களின் மாவட்ட செயலர் சு.முரளிதரன் சிறப்பான ஒருவர். அவர் உங்களுக்குத் தேவையானவற்றை நிச்சயம் நிறைவேற்றித் தருவார்.

ஆரம்பத்தில் சிறுதொழில் முயற்சியாளர்களாக இருந்த பலர் இன்று பெரும் கைத்தொழிற்சாலைகளை உருவாக்கி பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். நீங்களும் அவ்வாறு பெரும் தொழிற்சாலைகளை உருவாக்கி ஏனையோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் சுற்றுலா மற்றும் சிறுகைத்தொழில் முயற்சிகளுக்கு உலக வங்கி உதவி செய்யும் சூழல் உருவாகியிருக்கின்றது. அவற்றை நாம் பயன்படுத்தி முன்னேறவேண்டும்.” – என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் செல்வி சின்னத்தம்பி சூரியகுமாரி, கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் திருமதி நளாயினி இன்பராஜ், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.









# கணவன் தாக்கியதால் மனைவி உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம் பகுதியில் கணவன் தாக்கியதால் மன விரக்தியடைந்த மனைவி தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

கட்டுடை, அரசடி வீதி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய 4 மாதக் குழந்தையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மனைவிக்கும் கணவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதன்போது கணவன் தனது மனைவியைத் தாக்கினார்.

இதனால் மன விரக்தியடைந்த மனைவி உயிரை மாய்த்துக்கொண்டார்.

உயிரிழந்தவரின் சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.



# பாடசாலை சீருடைகளை விநியோகிக்கும் பணி நிறைவு

இந்த ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை விநியோகிக்கும் பணி நிறைவடைந்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, 10,096 பாடசாலைகளை சேர்ந்த 460,000 அதிகமான மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

சீன அரசிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட குறித்த சீருடைகள், சுமார் 5,171 மில்லியன் ரூபா பெறுமதி உடையவையென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.





# தேசபந்து தென்னகோனுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கை



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

பொலிஸ் மாஅதிபர் தற்போது பல்லேகல தும்பற சிறைச்சாலையில் பாதுகாப்பு சிறைகூடமொன்றில் தடுத்து வைக்க வைக்கப்பட்டுள்ளார் என திணைக்களம் தெரிவித்தது.

நீதிமன்ற உத்தரவுக்கமையவே அவருக்கு விசேட பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக திணைக்களம் கூறியது.

பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோனை எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கடந்த வியாழக் கிழமை உத்தரவிட்டது.

தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 08 பேரை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த மாதம் 28 ஆம் திகதி பிடியாணை பிறப்பித்தது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வெலிகமையில் உள்ள ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரியொருவர் உயிரிழந்தார். இதன் காரணமாகவே தேசபந்து தென்னகோன் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# வேட்புமனு நிராகரிக்கப்பட்டதன் மூலம் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளது

**முன்னாள் வல்வெட்டித்துறை நகரபிதா சபாரத்தினம் செல்வேந்திரா தெரிவிப்பு**




(எஸ்.ரகுதீஸ்)

"வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புகளின் ஆதரவுடன் மக்களுக்கு சேவையாற்றும் நோக்கில் நாம் எமது மக்களின் ஆதரவுடன் சுயேச்சை குழுவாக போட்டியிட முன்வந்தோம். அந்தவகையில் எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதன் மூலம் வல்வெட்டித்துறை மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு வல்வெட்டித்துறை சுயேச்சைக்குழுவின் முதன்மை வேட்பாளர் முன்னாள் வல்வெட்டித்துறை நகரபிதா சபாரத்தினம் செல்வேந்திரா தெரிவித்தார்.

வேட்புமனு நிராகாரிக்கப்பட்டமை தொடர்பில் யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றைய தினம் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை செலத்திய போது வேட்புமனு தாக்கலின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான அறிவுறுத்தலுக்கு அமைவாக அவற்றை தயார் செய்து சமர்ப்பித்திருந்தோம்.

வேட்புமனு தாக்கல் 17ஆம் திகதி இடம்பெற இருந்த நிலையில் இறுதி நேரத்தில் 16 ஆம் திகதி வேட்பாளர்களது பிறப்பு சான்றிதழ்களின் மூலப்பிரதி கட்டாயம் இணைக்கப்பட வேண்டும் என திடீரென மாற்றம் செய்திருந்தனர். இந்த மாற்றம் தொடர்பில் போதிய அறிவுறுத்தல் எதனையும் வழங்காதது அவர்களது தவறாகும்.

வேட்புமனு தாக்கல் செய்வதற்காக சென்ற சமயத்தில் மாவட்ட செயலக வளாகத்தில் வேட்புமனு தாக்கல் செய்யும் தரப்பினருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் எமது ஆவணங்களையும் சரிபார்த்திருந்தார்கள். இதன்போது பிறப்பு சான்றிதழ் பிரதியில் சமாதான நீதவான் மூலம் உறுதிப்படுத்தி வழங்குமாறு அறிவுறுத்தியிருந்தார்கள். உடனடியாக அதனை செய்தே நாம் வேட்புமனு தாக்கல் செய்திருந்தோம். மேற்குறித்த மாற்றம் குறித்து உதவி வழங்குவதற்காக இருந்த உத்தியோகத்தர்கள் கூட எதனையும் எமக்கு தெரிவிக்கவில்லை.

இந்த விடயத்தில் தேர்தல் திணைக்களம் தனது கடமையில் இருந்து தவறியுள்ளது. அவர்களது அறிவுறுத்தலுக்கு அமைவாக ஆவணங்களை இணைத்து தாக்கல் செய்திருந்த எமது வேட்புமனுவை நிராகரித்திருந்தமை எமக்கு ஏமாற்றமாக இருந்தது.

இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டபோது, சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், கொழும்பின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தாம் செயற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இறுதிநேர மாற்றம் தொடர்பில் போதிய அறிவுறுத்தல் வழங்கப்படாத நிலையில் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்ற தவறை சுட்டிக்காட்டி தமது வேட்புமனுவை மீள ஏற்றுக் கொள்ளுமாறு கோரி எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்ட போது நிராகரிப்பு தொடர்பில் தாங்கள் தீர்மானித்து விட்டோம். மேற்கொண்டு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சென்று நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார்.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புகளின் ஆதரவுடன் மக்களுக்கு சேவையாற்றும் நோக்கில் நாம் எமது மக்களின் ஆதரவுடன் சுயேட்சை குழுவாக போட்டியிட முன்வந்தோம். அந்தவகையில் எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதன் மூலம் வல்வெட்டித்துறை மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே பார்க்கின்றோம். நீதித்துறை ஒன்றே எமது நம்பிக்கையாக இருக்கிறது. இந்த விடயம் தொடர்பில் கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் ஊடாக நீதிகேட்டு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். எமது மக்களின் ஜனநாயக உரிமையை நிலைநிறுத்தும் வகையில் எதிர்வரும் நாள்களில் கொழும்பு சென்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தை நாட உள்ளோம்." என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்ட கருத்து, சட்டத்தரணி என்ற அவருடைய அந்தஸ்தைக் கூட கேள்விக் குள்ளாக்கி இருக்கின்றது என்றே கூற வேண்டும்.

தமது மாநகர சபை வேட்பாளர் பட்டியலில் ஒருவரை தகுதி நீக்கியமைக்காக, பட்டியலையே நிராகரித்த அதிகாரிகள், அதன் மூலம் பக்கச் சார்பாக நடந்து கொண்டார்கள் என்று குற்றச்சாட்டை அவர் முன் வைத்திருக்கின்றார்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் நல்லூர் பிரதேச சபை வேட்பாளர் பட்டியலில் ஒரு வேட்பாளரைத் தகுதி நீக்கம் செய்த அதிகாரிகள், அந்த பட்டியலை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்று கூறி, தமிழரசு கட்சிக்கும் தங்களுக்கும் இடையில் அதிகாரிகள் பாகுபாடாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டையும் அவர் வைத்திருக்கிறார்.

உண்மையில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும். ஆயினும் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக அவர் சின்னத்தனமாக இப்படிக் கருத்து வெளியிட்டு இருக்கின்றார் என்று தெரிகின்றது.

விடயத்துக்குள் இறங்க முன்னர், தமிழரசுக் கட்சிக்கு மாத்திரமல்ல, பல கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்களில் ஓரிரு வேட்பாளர்களின் தகுதியின்மை காரணமாக அவர்களைப் போட்டியிலிருந்து நீக்கிய அதே சமயம் அந்தப் பட்டியல்களைத் தேர்தலுக்கு ஏற்றிருக்கின்றது தேர்தல் திணைக்களம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

யாழ். மாநகர சபைத் தேர்தலுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏழு தரப்புக்களின் வேட்பு மனுக்களில் ஒன்று மொட்டுக் கட்சியினுடையது. அதனுடைய வேட்பாளர் யோகரத்தினம் கிருஷாந்தி என்ற பெண் வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது இல்லாமல் அப்பட்டியல் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதேபோல ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சத்தியநாதன் சபிசன் என்பவரது பெயர் நீக்கப்பட்ட போதும் பட்டியல் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சாவகச்சேரிநகரசபையில்ஈ.பி.டி.பியின் வேட்புமனுவில் ஒரு நேரடி வட்டார வேட்பாளரான மருதன் கரிசனின் பெயர் நீக்கப்பட்ட போதும் பட்டியல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவுப்பற்றில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் இரு வேட்பாளர்களான சிவனேசராஜா ஒளிர்வளசுதன், அரசரட்டினம் சப்தசவகீர்த்தி ஆகிய இருவரின் பெயர்கள் நீக்கப்பட்ட போதும் பட்டியல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதே கட்சியின் திருகோணமலை மாநகர சபையின் பட்டியலில் முருகாபுரி வட்டாரத்தின் நேரடி வேட்பாளர் பெயர் நீக்கப்பட்ட போதும் பட்டியல் ஏற்கப்பட்டுள்ளது.

அப்படி மணிவண்ணன் சுட்டுவது போல நல்லூரில் தமிழரசு கட்சியினுடையது மட்டுமின்றி, பல்வேறு இடங்களிலும் பல்வேறு தரப்புக்களினதும் வேட்பாளர் பட்டியல்களில் ஓரிரு வேட்பாளர்கள் நீக்கப்பட்ட போதும் அத்தரப்புகளின் வேட்பு மனுப் பட்டியல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

அப்படியாயின், யாழ் மாநகர சபையில் மணிவண்ணன் அணியினருக்கு – மான் சின்னக் குழுவினருக்கு – நடந்தது என்ன? இவ்விடயத்தில் மணிவண்ணன் மூடி மறைக்கும் உண்மை யாது?

வேட்பாளர் பட்டியலில் இளைஞர்களின் வீதம் இத்தனை, மகளிர் வீதம் இத்தனை இருக்க வேண்டும் என்பவை தொடர்பான திட்டவட்டமான அறிவுறுத்தல்கள் உண்டு. ஒரு பட்டியலில் இருந்து ஓரிரு வேட்பாளர்களை நீக்கும் போது இந்த விகிதாசாரம் குறித்த அளவிலிருந்து குறைந்தால் அந்தப் பட்டியல் நீக்கப்படும்.

யாழ் மாநகர சபைக்கு மொட்டுக் கட்சியில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவில் ஒரு மகளிர் பெயர் நீக்கப்பட்டது. அப்படி நீக்கப்பட்ட பின்னரும் அந்தப் பட்டியலில் மகளிர் தரப்புக்கு ஒதுக்கப்பட்ட விகிதம் தேர்தல் விதிமுறை வீதத்திலும் குறையாமல் இருந்த காரணத்தினால் அந்தப் பட்டியல் ஏற்கப்பட்டது.

அதுவே ஏற்கப்பட்ட ஏனைய பட்டியல்கள் விடயத்திலும் இடம்பெற்றது.

ஆனால் மணிவண்ணன் தரப்பின் மாநகர சபை வேட்பு மனுவில் அப்படி நடக்கவில்லை. அந்தப் பட்டியலில் ஜெகநாதன் அனுஷ்கா என்ற மகளிர் வேட்பாளரின் சத்தியக் கடதாசியில் சட்டத்தரணி சீல் மட்டும் இருக்கும்போது ஒப்பம் இல்லாத காரணத்தினால் அந்த வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டது. அப்படி நீக்கப்பட்ட பின்பு தமிழ் மக்கள் கூட்டணியின் பட்டியலில் இருக்க வேண்டிய 25 வீதப் பெண் பிரதிநிதித்துவமும் இல்லாமல், இளைஞர் பிரதிநிதித்துவமும் குறைவடைந்தமையால் அந்த ப் பட்டியல் நிராகரிக்கப்பட்டது.

நல்லூரில் தமிழரசுக் கட்சி சார்பில் பட்டியலில் நீக்கப்பட்டவரும் இளம் வேட்பாளர்தான். இவரைநீக்கியபின்பும்தேவையான விகிதத்தில் இளம் வேட்பாளர்கள் எண்ணிக்கை இருந்த காரணத்தினால் அங்கு அவரை நீக்கிவிட்டு தமிழரசு கட்சியின் வேட்பு மனு ஏற்கப்பட்டது.

அப்படி இருக்க, தமிழரசின் மனுவை ஏற்ற அதிகாரிகள் தங்களின் மனுவை மட்டும் நிராகரித்து விட்டார்கள் என்று கூறி மக்களை – வாக்காளர்களை – தவறாக வழிநடத்த முயற்சித்திருக்கின்றார் மணிவண்ணன்.

மணிவண்ணன் தரப்பு வடக்கில் 13 சபைகளுக்குக் கட்டுப்பணம் செலுத்திய போதிலும் போட்டியிட ஆள்களைத் தேடிப் பிடிக்க முடியாத சூழலில் வெறுமனே ஏழு சபைகளுக்குதான் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடிந்தது. அதிலும் மூன்று சபைகளுக்கான மனுக்கள் நிராகரிக்கப்பட்டு விட்டன. வலி. வடக்கில் வேட்பாளர்கள் இல்லாதமையால் ஒரு குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு பேரை வேட்பாளராக சேர்த்திருப்பதாகவும் ஒரு தகவல் உண்டு.

இப்போதைய நிலையில் நல்லூரில் ஏதேனும் கிட்டாதா என்ற எதிர்பார்ப்பில் மணிவண்ணன் அணியினர் இருக்கின்றனர். அங்கு போட்டிக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸூம் இல்லை. ஆக, தமிழரசுக் கட்சிதான் தமிழ்த் தேசிய வாக்குகளுக்கு இலக்கு வைத்து அங்கு காய் நகர்த்துகிறது. அதனால் அந்தத் தரப்பை முறையற்ற விதத்தில் சாடுவதற்காக அங்கு ஒரு வேட்பாளரை தகுதி நீக்கிவிட்டு, தமிழரசின் பட்டியலுக்கு அங்கீகாரம் வழங்கிய விடயத்தை தவறான முறையில் வியாக்கியானம் செய்து அரசியல் லாபம் தேட முயல்கிறார் மணிவண்ணன். ஆயினும், சட்டம் தெரிந்த மணிவண்ணனுக்கு இந்த அணுகுமுறை சரியானதோ, பொருத்தமானதோ அல்ல.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிளிநொச்சி பொலிஸாரால் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

## நம்பி வாக்களித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"இறுதி வரவு – செலவுத் திட்ட உரையின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல விடயங்களை ஐக்கிய மக்கள் சக்தி மீது முன்வைத்தார். தற்போதைய அரசு பல்டி அடிக்காது என ஜனாதிபதி தெரிவித்த போதிலும், மக்கள் விடுதலை முன்னணியினர் அன்று அரசியல் பல்டிகளை அடித்தனர். விமல் வீரவன்ஸ மக்கள் விடுதலை முன்னனணியை விட்டு வெளியேறினார். அமைச்சரவை அமைச்சர்களாக இருந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் பலர் கட்சியை விட்டு வெளியேறிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. மக்கள் விடுதலை முன்னனணியிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்துள்ளன.

தற்போதையஅரசுபோன்றுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறாமல், மக்கள் சார்பான முடிவுகளையே ஐக்கிய மக்கள் சக்தி எடுக்கும். மக்களைத் தவறாக வழிநடத்தும் ஏமாற்று வேலைத் திட்டங்களையே தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது.

ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மாற்றுவோம் என்று கூறினர். ஆனால், தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்து எந்த மாற்றமும் இல்லாமல் முன்னாள் ஜனாதிபதியின் (ரணில் விக்கிரமசிங்க) அதே தொங்கு பாலத்திலேயே பயணித்துக் கொண்டிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதியின் அதே கொள்கைகளையே இந்த அரசும் பின்பற்றுகின்றது.

மக்களுக்கு ஒன்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிறகு வேறு எதையோ செய்து கொண்டிருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியால் இது போன்ற எரிச்சலூட்டும் வேலையைச் செய்ய முடியாது. மக்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றி வழங்கிய வாக்குறுதிகளுக்குப் புறம்பாக வேறு கொள்கைகளை முன்னெடுப்பது வெட்கக்கேடானசெயலாகும். மக்களை ஏமாற்று முடிவுகளை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாரில்லை." – என்றார்.

## குட்டித் தேர்தலிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து இடங்களிலும் வென்றோம். எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின்போது கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணை அதிகரிக்குமே தவிர குறைவதற்கு வாய்ப்பு இல்லை.

நாடாளுமன்றத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காத நபர்கள்கூட இந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகள் கொள்ளையர்களின் கூடாரங்களாக இருந்தன. மோசடிகள் இடம்பெற்றன. மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டவர்கள் ஒப்பந்தக்காரர்களாகவே செயற்பட்டனர். இந்த நிலைமை எமது ஆட்சியின் கீழ் மாற்றியமைக்கப்படும்.

முன்பு ஜே.வி.பி. வசம் இருந்த திஸ்ஸமஹாராம பிரதேச சபையைக்கூட சூழ்ச்சி செய்தே ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் கைப்பற்றினர். போர் வெற்றி, மின்சாரக் கதிரை இதற்காகப் பயன்படுத்தப்பட்டது. அந்தக் காலம் முடிந்துவிட்டது." – என்றார்.

# 2 பஸ்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 40 பேர் காயம்





கொழும்பு – கண்டி வீதியின் வறக்காபொல ஹெலகல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபையின் 2 பஸ்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் வறக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மாத்தறை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்: “பாலே மல்லி”க்குத் தொடர்பு உள்ளதா?



மாத்தறை மாவட்டம், தெவிநுவர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தெவிநுவர பகுதிக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11.45 மணியளவில் வானில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தெவிநுவர பகுதியைச் சேர்ந்த கசுன் தாரக்க என்ற 29 வயதுடைய இளைஞரும், யொமேஷ் நதீஷான் என்ற 28 வயதுடைய இளைஞருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும் தெவிநுவர, கபுகம்புர பிரதேசத்தில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது.

இதையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், துப்பாக்கிதாரிகள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வான் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், துப்பாக்கிச்சூடு இடம்பெற்ற இடத்தில் வைத்து ரி – 56 ரக துப்பாக்கி, தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

டுபாயில் உள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “பாலே மல்லி” என்று அழைக்கப்படும் ஷெஹான் சத்சர ஹேவத் என்பவரின் தலைமையில் இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

“பாலே மல்லி” என்பவருக்கும் உயிரிழந்த இளைஞர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டுக்கு ஆபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

”நாடளாவிய ரீதியில் யானை சின்னத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் களமிறங்கியுள்ளது. நாடு வீழ்ச்சியடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியே அதனை மீட்டெடுத்திருக்கின்றது.

அதற்கமைய இனிவரும் காலங்களிலும் நாட்டுக்காக ஐக்கிய தேசியக் கட்சி அதன் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும். 1994ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவரானதிலிருந்தே ரணில் விக்கிரமசிங்க இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றார். எனவே, தற்போது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என அவ்வாறானவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை சமூகத்தில் எந்தவொரு சமூகத்தினருக்கும் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. எனவே, முதலில் இந்த அறிக்கையை முழுமையாக வாசிக்குமாறு சகலரையும் வலியுறுத்துகின்றோம். அவ்வாறு அதனை முழுமையாக வாசிப்பவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வேலைத்திட்டங்களில் இருந்து வெளியேறுவார்கள்.

இம்முறை தேர்தலில் அரசை விடுத்து ஏனைய கட்சிகளுக்கே மக்கள் வாக்களிப்பார்கள். நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றி தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாராகவே இருக்கின்றார். எனவே, இளம் தலைமுறையினர் வரலாற்றைத் தெரிந்து கொண்டு அதற்கமைய தீர்மானங்களை எடுக்க வேண்டும்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கூட்டினால் பேராபத்து

பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனினால் மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' என்ற புதிய கூட்டமைப்பில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இணைந்து கொண்டுள்ளார். அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பில் கைச்சாத்திடப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்குவதற்காகப் புதிய முயற்சியொன்றை பிள்ளையான் மேற்கொண்டார். 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' எனும் புதிய கூட்டமைப்பை உருவாக்கினார். அதில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்குத் தமிழர் கழகத்தினர் இணைந்து கொண்டனர். அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இதனையடுத்து, எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் படகு சின்னத்தில் இணைந்து வியாழேந்திரன் அணியினர் களமிறங்கியுள்ளனர்.

இந்தநிலையில், கிழக்கு தமிழர் கூட்டமைப்புக்கும் கருணா தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தானதையடுத்து, பிரிந்திருந்த கருணா - பிள்ளையான் ஆகியோர் மீண்டும் இணைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைமைக்கு துரோகம் இழைத்த போது ஒன்றுபட்டு நின்று கூட்டுக் களவாணிகளாகச் செயற்பட்ட பிள்ளையானும் கருணாவும் பின்னர் கிழக்கில் அரசியல் ஆதிக்கத்துக்காக தங்களுக்குள் மோதுண்டு பிரிந்து நின்றார்கள். இருவரையும் பயன்படுத்திய சிங்களப் புலனாய்வுத் தரப்புகள், தங்கள் வேலை முடிந்ததும் இருவரையும் மோத விடத் திட்டமிட்டுக் காய் நகர்த்தின. அந்தச் சதி வலையில் சிக்கி தங்களுக்குள் அவர்கள் முரண்பட்டு நின்று மோதினார்கள். இப்போது அந்தப் புலனாய்வுத் தரப்புகளினால் கைவிடப்பட்டு, அரசியலிலும் அதிகாரம் இல்லாமல் செல்லாக் காசாக்கப்பட்ட நிலையில் மீண்டும் தாங்கள் அதிகாரத்தைப் பெறுவதற்காக புலிகளுக்குத் துரோகம் இழைத்த கூட்டுக் களவாணிகள் ஓர் அணியில் இணைந்திருக்கிறார்கள்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் முடிந்த பின்னரே இந்தக் கூட்டு ஒன்று சேர்ந்திருக்கிறது. அதனால் இந்தத் தேர்தலில் பெரிய மாற்றங்கள் வந்து விடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆயினும், இனி வரக்கூடிய மாகாண சபை தேர்தலை இலக்கு வைத்தே இந்தக் கூட்டு இப்போதே முன்னெடுக்கப்படுவதாகத் தோன்றுகிறது.

இந்தக் கூட்டின் பின்னால் தமிழர் தரப்பு - முக்கியமாக கிழக்கில் தமிழர் தரப்பு - ஓர் ஆபத்தான ஏது நிலையை எதிர்கொள்ளக்கூடிய சூழல் உண்டு.

இந்தக் கூட்டு, கிழக்குத் தமிழர்கள் மத்தியில் தமது ஆதரவை - ஆதிக்கத்தை - செல்வாக்கை - நிலை நிறுத்துவதற்காக மற்றொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வலைகளைத் தூண்டி நெருக்கடிகளை கிளப்பி விடும் ஆபத்து உண்டு.

தமிழ், சிங்கள, முஸ்லிம் தலைவர்கள் எச்சரிக்கையோடு கையாள வேண்டிய விவகாரம் இது. அதிக கவனமும் சிரத்தையும் எடுக்க விட்டால் கிழக்குத் தமிழர்களின் ஆதரவை பெருக்குவதற்காக முஸ்லிம் விரோத போக்குகள் புதிய கூட்டுப் போன்ற தரப்புகளினால் தூண்டி விடப்படக் கூடிய பேராபத்து உண்டு.



# போக்குவரத்து வலையமைப்பை உருவாக்குவதற்குத் தீர்மானம்

நாடு முழுவதும் பத்து புதிய பல்வகை போக்குவரத்து நிலையங்களைக் கொண்ட போக்குவரத்து வலையமைப்பை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, மொரட்டுவை, ராகமை, கடவத்தை, கம்பஹா, மாலம்பே, அத்துருகிரிய, கட்டுநாயக்க மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளை மையமாகக் கொண்டு குறித்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

கண்டியிலும் காலி மாவட்டத்தின் தெவட்ட பகுதியிலும், மேலும் இரண்டு பல்வகை போக்குவரத்து நிலையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அனுராதபுரம் போக்குவரத்து நிலையத்தில் சுமார் 40 சதவீத மேம்பாடுகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், மற்ற பல்வகை போக்குவரத்து நிலையங்களின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

## கொட்டாஞ்சேனை பொலிஸாரிடம்

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

கொழும்பு – கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரமானந்த மாவத்தைப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



கொட்டாஞ்சேனை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொட்டாஞ்சேனை பகுதியில் வசிக்கும் 25 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 11 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய போதனாவியல் டிப்ளோமா தாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை ஆரம்பம்

தேசிய போதனாவியல் டிப்ளோமா தாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கான தகவல்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.



தேசிய கல்வியற் கல்லூரிகளில் பாடநெறிகளைத் தொடர்ந்த பயிலுனர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான தகவல்கள் நிகழ்நிலை முறை மூலம் பெறப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்தது.

அதற்கமைய teacher.moe.gov.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து அதில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# உருப்படுமா தமிழ் தேசியம்?


- வி.எஸ்.சிவகரன் -

நீண்ட நெடிய வரலாற்றுப் படிமத்தையும், வாழ்வியல் மரபையும், பண்பாட்டியல் ஒழுங்கையும் தன்னகத்தே கொண்ட தமிழினம் வரலாற்று தவறுகளில் இருந்து தன்னைத் தகவமைத்துக் கொள்ளக்கூடிய அனுபவப்பட்டறிவை பகுத்துணர்ந்து தெளிந்து அதிலிருந்து மீளக்கூடிய நோக்கு நிலையை உருவாக்குவதிலிருந்து தவறி வருகிறது.

காலக்கண்ணாடியின் கூர்மையிலிருந்து நிகழ் தகவுகளை நெறிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்ற போதிலும், அந்த நெறிமுறைக்குட்படாமல் நழுவியோடும் கைங்கரியத்தையே இன்றைய வாக்கு வணிக தமிழ்த் தேசிய கட்சி நடத்துபவர்கள் மூலதன இருப்பாகக் கொள்கின்றனர்.

தமிழினம் கடந்து வந்த பயணப் பாதையை திரும்பிப் பார்ப்பதற்கு கூட இன்று பலருக்கு வெறுப்பாக இருக்கிறது. வியர்க்க உழைப்பதற்கு எவரும் தயாராக இல்லை. ஆனால் காற்று வாங்குவதில் மட்டும் முண்டியடிக்கின்றனர். இப்படித்தான் பதவி சுகத்தின் மீது உள்ள அதீத பற்றால் இன விடுதலை சார்ந்த உழைப்பை மறந்து விடுகின்றனர். மழைக் காலத்து புற்றீசல்கள் போல் கிராமங்களுக்குச் சுற்றுலா செல்கிறார்கள். தேர்தல் காலத்தை இப்படி உபயோகிப்பதனால் தான் மக்கள் மத்தியிலே வெறுப்பும் கோபமும் வெகுண்டு எழுகிறது. தேர்தலிலே வேட்பு மனுவை பூர்த்தி செய்வதற்கு வேட்பாளர்கள் இன்மையால் திண்டாடினார்கள். ஒரு கட்சி கூட ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலில் வேட்பாளர் தெரிவு மேற்கொள்ளவும் இல்லை, அதற்குரிய தயார்படுத்தல்களை கடந்த காலத்தில் ஏற்படுத்தவும் இல்லை.

வழமை போன்று தமிழ்த் தேசியக் கட்சிகள் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுய நிர்ணய உரிமை, இணைந்த வடக்கு – கிழக்கு என ஏமாற்று வாசகங்களை கவர்ச்சிகரமாகப் பேசி, உணர்வூட்டி, மக்களை திசை திருப்புகின்ற தந்திரத்தில் பெரும் பின்னடைவு கண்டு வருகின்றன.

ஏனெனில் கடந்த ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் இவர்களுக்கு வழங்கிய சம்மட்டி அடியில் இருந்து இன்னும் இவர்கள் மீண்டவர்களாகத் தெரியவில்லை.

மக்களினுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளாமல், அந்த மக்களோடு உறவாடாமல், அந்த மக்களினுடைய விடுதலை அரசியல் இருப்பை தனதாக்கிக் கொள்ளக்கூடிய ஏது நிலைகள் உருவாக்காத

அந்தத் தடுமாற்றம்தான் வேட்பாளர் தெரிவில் கட்சிகள் திண்டாடியது. அதன் விளைவு அவசர அவசரமாக பட்டியலை நிரப்பி ஒப்படைக்க வேண்டிய தேவை இருந்ததனால்தான் அதிகமான கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. தமக்கு எல்லாம் தெரியும், தாம் பெரிய அறிவாளிகள் என மற்றவர்களுக்கு ஜாடை காட்டுபவர்களின் வேட்பு மனுக்களே அதிகம் நிராகரிக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக யாழ் மையவாத சிந்தனையில் ஊறித் திளைப்பவர்கள் தங்களைத் தாங்களே ஜாம்பவான்கள் ஆக எண்ணிக் கொள்கிறார்கள்.

அதனால் தான் இந்த பின்னடைவும் நெருக்கடியும் அவர்களுக்கு ஏற்பட காரணமாக இருக்கிறது. கொள்கை ரீதியாகவும் யாழ்பாண மக்களிடம் இப்பொழுது பாரிய அளவிலே வீழ்ச்சி ஏற்பட்டவிட்டது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மாத்திரமன்றி 2009 க்கு பின்னர் நடைபெற்ற பல தேர்தல்களிலும் அதனை உற்று நோக்கக் கூடியதாக உள்ளது.

கொள்கை, கோட்பாடு, இலட்சியம், தூரநோக்கு இவற்றையெல்லாம் விடுத்து சீசன் வியாபாரமாக சந்தர்ப்பவாத நோக்கில் தெற்கோடு இணைந்து பயணிக்க கூடிய வகையில் ஆளுங்கட்சியோடு நெருக்கமாக இருக்கக் கூடிய ஓர் அணுகு முறையை பிரதிபலிக்கிறார்கள். அது என்றும் இல்லாத வகையில் இனவாத வகுப்புவாத ஜே.வி.பியை ஆதரிப்பது என்பது தமிழ் தேசியத்திற்கும் விடுதலைக்காக மரணித்த மாவீரர்களுக்கும் செய்யும் மிகப் பெரிய வரலாற்று துரோகமாகும்.

அந்த துரோகத்தில் இருந்து யாழ்ப்பாண மக்கள் மீள வேண்டியது அவசியமாகும். கடந்த தேர்தலில் இவ்விடயங்கள் வெளிப்படையாகவே அவர்களினுடைய மனோநிலைகளை தெளிவு படுத்தியது. இனப்படுகொலையின் சூத்திரதாரிகளாக இருந்த ஜே.வி.பியை ஆதரித்தார்கள். எந்தக் கொள்கையும் இல்லாமல் கோமாளிக்கூத்தாடிய வைத்தியரையும் ஆதரித்தார்கள். அப்படியாயின் படித்த சமூகம் என தங்களை மார்தட்டிக் கொள்ளும் யாழ்ப்பாண சமூகத்தின் அறிவு நிலையைப் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

சுயநலத்தின் மொத்த வடிவமாகத்தான் அவர்கள் சிந்திக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

மக்களுக்கான இன விடுதலை அரசியலை மேற்கொள்ள விரும்புபவர்கள் வேட்பு மனு பூர்த்தி செய்ததில் அவர்களின் அர்ப்பணிப்பின்மை தெளிவாக தென்பட்டது. எதையுமே ஆழமாக சிந்தித்திருக்க வேண்டும். காலத்துக்கு காலம் உணர்ச்சிவசமான வார்த்தைகள் மூலம் ஏமாற்றி, வாக்குஒ பெற்று, தமது சுயநல இருப்பை தக்க வைக்க முனைவது போல் தற்போது முடியாது என்பதனை இவர்கள் எல்லோரும் உணர்ந்து இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் ஏனைய இனங்களுடன் கூட்டாக உள்ள மாவட்டங்களாகும். இந்த மாவட்டங்களிலே இருக்கின்ற உள்ளூர் பிணக்குகள் கோட்பாட்டு ரீதியான வாக்கு வங்கியை பெரிதும் பாதிக்கும் என்பதனை தமிழினத்தின் எதிர்கால இருப்பு தொடர்பில் எந்த விதமான அக்கறையும் இல்லாத தமிழ்த் தலைவர்கள் என சொல்லப்படுபவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

அவ்வாறான இடங்களில் முரண்பாடுகளை தவிர்த்து, இலக்கை அடைய முடியாமல் போகக்கூடிய இடங்களில் போட்டித் தவிர்ப்பினை மேற்கொண்டு இருக்க வேண்டும்.

அந்த விடயத்திலும் அவர்கள் முன் வரவில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிலைமையை மனதில் நிறுத்திக் கொண்டு ஏனைய மாவட்டங்களுக்கும் தீர்மானம் எடுக்க முனைவதனால் தான் நெருக்கடி ஏற்படுகின்றது. அந்தந்த மாவட்டத்தினுடைய பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு இந்தத் தேர்தலை எதிர்கொண்டு இருக்க வேண்டும்.

தொடர்ச்சி▼



# உருப்படுமா தமிழ் தேசியம்?

தொடர்ச்சி▲

இது உள்ளூர் தேர்தல் என்பதால் அந்த மக்களினுடைய அடிப்படை வாழ்வியல் – வாழ்வாதார நிலைமைகளை அரசியல் கடந்து எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த தேர்தலிலே நான்கு அணிகளாக போட்டியிடுகின்றனர்.

கிழக்கிலே கடந்த காலத்தில் துரோகிகள் அல்லது ஒட்டுக் குழுக்கள் என வர்ணிக்கப்பட்டவர்கள் தங்களுக்குள் ஒரு கூட்டமைத்து இருக்கின்றனர். அது தமிழ் தேசிய கட்சிகளை ஓரளவுக்கேனும் பாதிப்பை ஏற்படுத்தலாம் – மட்டக்களப்பு போன்ற பகுதிகளில்.

அதேபோல் வடக்கில் – பிரதான அணிகள் களத்தில் உள்ள போதும், தங்களைத் தவிர மற்ற எல்லோரும் தரம் குறைந்தவர்கள், இந்தியாவினுடைய அடிமைகள், அரசினுடைய கைக்கூலிகள், பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்பவர்கள், துரோகிகள் எனப் பல்கலைக்கழகம் வழங்கும் பட்டம் போல் எல்லோருக்கும் பட்டம் வழங்குவதில் பெரிதும் விஞ்சிய ஒட்டாத குழுக்கள் – அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் எனும் குடும்பக் கட்சியின் முதலாளிகள் – இப்பொழுது அவர்களால் துரோகிகள், அடிமைகள், ஊழல்வாதிகள், கொள்கை இல்லாதவர்கள் என சந்தி சந்தியாய் விமர்சிக்கப்பட்டவர்களோடு கூட்டமைத்து இருக்கிறார்கள்.

ஆணவத்தோடு முன்னுக்குப் பின் முரணாக பொய்யும் புரட்டும் பேசியவர்களைக் காலம் சுருட்டிப் போட்டு இருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியின் விளைவாக எதிர்காலத்திலாவது சபை குழப்பி அரசியலை விடுத்து எல்லோருடனும் சகோதரத்துவ அரசியலை முன்னெடுப்பார்களா என்பதே கேள்வி.

இனி மற்றவர்களுக்குப் பட்டம் கொடுக்க முடியாத நிர்கதிக்குள் சிக்கித் தவிக்கின்றனர் என்பதே பரிதாபத்துக்குரிய வேடிக்கை. காலம் கொடியது என்பதை கஜேந்திரகுமார் போன்ற ஆணவக்காரர்கள் உணர வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு பொது வேட்பாளர் என்கின்ற மாயாஜாலத்தோடு, பொது அமைப்புகள் என்கின்ற சில அரசியல் சிந்தனை உள்ள பிரமுகர்களுடன் இணைந்து சங்கை உருவாக்கியவர்களலின் வேட்பு மனுக்கள் இந்த தேர்தலில் 12 இடங்களில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அதிகூடிய புத்திசாலிகளெல்லாம் அதிகம் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ள போதிலும் இந்தப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அரசியலில் குறைந்தபட்ச நேர்மை என்றாலும் இருக்க வேண்டும். அது கூட இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக சந்தர்ப்பவாத அரசியல் பேசினால் இந்த நிலைதான் தோன்றும் என்பது பொது விதி. அது சங்குக்கும் தலைவிதியாக மாறி உள்ளது. அறம் நின்று கொல்லும்.

இந்தத் தேர்தலிலும் தமிழரசு கட்சி பழைய கூட்டாளிகளை பலமுறை அழைத்தது. அவர்கள் இவர்களை ஒரு பொருட்டாகவே கணக்கெடுக்கவில்லை. இந்த அவமானம் தமிழரசு கட்சிக்கு தேவையா? அவர்கள் தங்களுக்குள் இருக்கின்ற உள்கட்சி முரண்பாட்டையே தீர்க்க முடியாமல் திண்டாடுகின்ற நிலையில் பதில் தலைவர், பதில் பொதுச் செயலாளர் என எல்லாம் பதிலில் உள்ள கட்சி மற்றவர்களை கூட்டிணைத்துக் கொண்டு போகக்கூடிய தார்மீக தகைமையைம் நம்பிக்கையும் இழந்து விட்டதாகவே அவர்கள் கருதி இருக்கக்கூடும். ஒரு காலத்தில் வீட்டுச் சின்னத்தில் விளக்குமாறை நிறுத்தினாலும் வெற்றி பெறலாம் என்று இருந்த நிலை, இப்பொழுது அந்தச் சின்னத்தில் தேர்தலுக்கு வேட்பாளருக்கே பெரும் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் அதன் தலைவர்கள் இன்னும் தங்களை சுய பரிசோதனை செய்தவர்களாக இல்லை. தங்களுக்குள் இருக்கின்ற மமதையில் நீயா, நானா எனப் போட்டிக் களத்தில் திண்டாடுகிறார்கள். அவர்களது அடிப்பொடிகள் சமூக ஊடகங்களில் மாறுபட்ட விமர்சனத்தில் காலத்தைக் கடத்துகின்றனர். இவ்வாறான நிலையில் வாக்காளர்கள் மத்தியிலே இவர்கள் பற்றிய பொதுநிலை அபிப்பிராயம் சிறுமைப்படுகிறது.

அதிகமான பொது அபிப்பிராயம் அற்ற கட்சிகளுக்கும் நம்பகத்தன்மையற்ற தலைவர்களை நம்பியும் தமிழ் மக்கள் எப்படி வாக்களிக்கப் போகிறார்கள்? நம்பிக்கையீனமான ஒருவரை – தமக்கு விசுவாசம் இல்லை என கருதுபவரை – எப்படி அந்த மக்கள் தங்களுடைய பிரதிநிதிகள் ஆகத் தேர்வு செய்வார்கள்? பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளோடு தொடர்புடையவர்களும் கடந்த காலத்தில் ஊழல்வாதிகள் என விமர்சிக்கப்பட்டவர்களும் பல கட்சிகள் மாறியவர்களும் இந்த தேர்தலில் வேட்பாளராகக் களம் இறங்கியுள்ளனர். ஊழலை ஒழிப்போம் என ஆட்சிக்கு வந்த அரசாங்கமும் பல இடங்களில் ஊழல்வாதிகளையே வேட்பாளராக்கி இருக்கின்றன. இதில் எந்தக் கட்சியும் விதிவிலக்கு அல். ஊழல் ஒழிப்பு என்கின்ற வாசகங்கள் எல்லாம் வெறும் கண்துடைப்புத்தானா? கடந்த தேர்தலிலே இருந்த குழப்பத்தை போல்தான் வாக்காளர்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்கின்ற குழப்பம் இப்பொழுதே ஏற்பட்டுள்ளது. இது உள்ளூர் தேர்தல் என்பதால் சாதி,சமயம், உறவினர்கள், பணம் என்பவை பிரதிபலிக்கலாம். இவற்றையும் கடந்து கொள்கை ரீதியாக வாக்களிப்பது என்றால் யாருக்கு வாக்களிப்பது என்கின்ற கேள்வி உண்டு.

குழப்பத்தில் உள்ள அந்த வாக்குகள் அரசை நோக்கி நகரலாம். அதிலும் குறிப்பாக யாழில் அதிகமாக இருக்கலாம். இஸ்லாமியர்கள் அதிகம் அரசை நோக்கி போவதற்கான வாய்ப்பு வெகுவாக குறைந்து இருக்கிறது. தமிழ் தலைமைகள் இந்தத் தேர்தலோடாவது தங்களின் தவறுகளை உணர்ந்து கொண்டு தாமாகவே ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

புதியவர்களுக்கு வழி வகுத்துக் கட்சிகளை ஒப்படைக்க வேண்டும். பல தசாப்தங்களாக தலைமை பதவியை அலங்கரித்துக் கொண்டிருப்பதனால் இந்த இனத்துக்கு தாங்கள் என்ன செய்தோம் என்கின்ற கேள்வியை தங்களுக்குள் எழுப்பிக் கொள்ள வேண்டும். மக்கள் மத்தியிலே பொது நம்பிக்கையும் அபிப்பிராயத்தையும் ஏற்படுத்தாத தலைவர்

தொடர்ச்சி▼



# உருப்படுமா தமிழ் தேசியம்?

தொடர்ச்சி▲

கள் எவரும் இந்த இனத்துக்கு தலைமை தாங்குவதற்கு தகுதியற்றவர்கள்.

அதனை உணர்ந்து கொள்ள வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பல தமிழ் கட்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்லாம். அதனை அவர்கள் உணர்ந்து கொண்டு மற்றவர்களுக்கு வழி விட வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலிலே அவர்கள் அதனை உணர்ந்து இருக்க வேண்டும். மக்கள் இத்தேர்தலிலும் பலரைக் கட்டுப்பணம் இழக்க வைப்பார்கள். அதிலிருந்தாவது இவர்கள் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் இந்த மக்கள் தொடர்ந்து ஜே.வி.பி. போன்ற கட்சிகளுக்கு வாக்களிப்பதைத் தவிர வேறு வழி இருக்க வாய்ப்பில்லை.எப்போதும் தடுமாறுவது மக்கள் அல்லர், தலைவர்களே. தலைவர்கள் தாங்கள் எப்பொழுது சந்தர்ப்பவாதத்தை முழுமையாக விலக்குகிறார்களோ அன்றைக்குத்தான் தமிழ் மக்களுக்கு விமோசனம் ஏற்படும். அந்த விமோசனம் விரைவில் ஏற்பட வேண்டும். இல்லையேல் இன்றைய இளம் சந்ததி அவர்களை மிக மோசமாக மலினப்படுத்தி அரசியல் அரங்கில் இருந்து அகற்றுகின்ற பரிதாபகரமான நிலை ஏற்படலாம். அதனை யாவரும் புரிந்து கொள்ள வேண்டியது வரலாற்று உண்மை. காலத்தின் கட்டாயம். இல்லையேல் காலத்தால் காணாமல் போவீர்கள் என்பதே வரலாற்று உண்மை.




# வேட்பாளர் வாக்காளருக்கு செலவிடக்கூடிய தொகையில் திருத்தம் மேற்கொள்ளத் தீர்மானம்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளர் ஒருவர் வாக்காளர் ஒருவருக்குச் செலவிடக்கூடிய தொகையில் திருத்தம் மேற்கொள்வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது, இந்த தேர்தல் செலவு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு பிரதேசங்களிலும் சனத்தொகை அடர்த்தி மற்றும் நிலப்பரப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு மேற்படி தொகையை நிர்ணயம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முந்தைய உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில், வேட்பாளரொருவர் வாக்காளர் ஒருவருக்குச் செலவிடக்கூடிய அதிகபட்ச தொகை 20 ரூபா என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட தேசிய மக்கள் சக்தியின் பிரதான செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் அபேசிங்க, தங்களது கட்சி சார்பில் செலவு தொடர்பான சூத்திரமொன்றைத் தயாரித்துத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கியதாகத் தெரிவித்தார்.

அதேநேரம், இதன்போது கருத்து வெளியிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளர் லசந்த அழகியவண்ண, தற்போதைய சூழ்நிலையில் 20 ரூபாவினை வேட்பாளர் ஒருவர் வாக்காளர் ஒருவருக்குச் செலவிடுவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என தெரிவித்தார்.

# நோர்வூட் பொலிஸ் பிரிவில் இடி விழுந்து கூரை சேதம்!



**(மஸ்கெலியா நிருபர்)**

நோர்வூட் பொலிஸ் பிரிவில் வெஞ்சர் பகுதியில் நேற்று மாலை 3.30 மணிக்கு இடி விழுந்ததால் ஒரு குடியிருப்பில் உள்ள கூரை பலத்த சேதம் அடைந்தது.

இச் சம்பவம் இடம் பெற்ற வேளையில் வீட்டில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஆறு அங்கத்தினர்கள் அந்த வீட்டில் இருந்தனர். தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை வில்லை. இருந்த போதிலும் வீட்டின் கூரை சேதமாகி உள்ளது என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்

# வவுனியா சிறையில் இருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்

**(கி.வசந்தன்)**

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நேற்றுத் தப்பி ஓடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அந்த நபரை விளக்கமறியல் வைக்க உத்தரவு வழங்கப்பட்டது.



இந்நிலையில் வவுனியா சிறைச் சாலையில் விளக்கமறியல் வைக்கப்பட்ட நபரே இவ்வாறு தப்பி ஓடியுள்ளார். அந்த நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வவுனியா சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் வவுனியா பொலிஸார் ஆகியோர் மேற்கொண்டு வருகிறார்கள்.

# உரும்பிராயில் இன்று திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் விழா இன்று ஞாயிற்றுகிழமை மாலை 03.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

உரும்பிராய் கற்பக பிள்ளையார் கலாசார மண்டபத்தில் அகில இலங்கை திருவள்ளுவர் மன்ற தலைவர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் யாழ் மாவட்ட செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் பிரதேச செயலர் சிவஸ்ரீ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் “வள்ளுவர் காட்டிய வாழ்வியல் கருத்துக்கள் இன்றைய சமூகத்திற்கு பெரிதும் ஏற்படையனவாக உள்ளன ! ஏற்புடையனவாக இல்லை!“ எனும் தலைப்பில் விசேட பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.





# மலையக நீர்த் தேக்கங்களில் தற்போது நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது

**(மஸ்கெலியா நிருபர்)**

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் வெப்பநிலை காரணமாக நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

குறிப்பாக விமலசுரேந்திர, கென்யோன்,லக்சபான,பொல்பிட்டிய,நவலக்சபான, கலுகல, காசல்ரீ, மவுசாகல, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 25 அடி குறைந்த உள்ளது. அதே போல் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட சுமார் 20 அடி குறைந்து உள்ளதுழ் கென்யோன் நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 16 அடி குறைந்து உள்ளது. மேல் கொத்மலை நீர் தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 18 அடி குறைந்து உள்ளது. ஏனைய நீர் தேக்கங்களின் நீர் மட்டமும் இவ்வாறு குறைந்த நிலையில் காணப்படுகிறது.

தொடர்ந்து இவ்வாறு காலநிலை தோன்றும் பட்சத்தில் மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பாரிய குடி தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும்.

தற்போது பல தோட்டங்களில் சுத்தமான குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.



# தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று திருகோணமலையில்

**(எஸ்.கீதபொன்கலன்)**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தினால் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று திருகோணமலை தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இதன்போது வாக்குரிமை, தேர்தல் வன்முறை, வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், கட்சி பிரதிநிதிகள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.










# வவுனியா சங்கம் அறிமுக விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் வவுனியா சங்கம் அறிமுக விழா நேற்று மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட பழைய மாணவர் ஒன்றியம் “வவுனியா சங்கமம்” என்ற பெயரைக் கொண்டு இங்கிலாந்தில் சென்ற ஆண்டு முதல் இயங்கி வருகின்றது. தேசத்தின் உறவுகளாக இங்கிலாந்தில் ஒன்று கூடி மகிழ்வது மட்டுமல்லாமல், தேசத்தின் மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டிலும் எல்லைப் புறக் கிராமங்களின் முன்னேற்றத்திலும் பங்குகொள்வதற்குமாக உருவாக்கப்பட்ட “வவுனியா பழைய மாணவர் ஒன்றியத்தின்“ ஏற்பாட்டில் வவுனியா நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, 25 முன்பள்ளிகளுக்கான தொலைக்காட்சி மற்றும் பென்டிரைவ் வழங்கி வைக்கப்பட்டன. “சங்கமம் 2024“ நூல் அறிமுகமும் இடம்பெற்றது. அத்துடன் கலை, கலாசார நிகழ்வுகளும் சிறப்பான முறையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம், முத்து முகமது, பிரதேச செயலாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வவுனியா மாவட்ட பழைய மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# தலைமன்னாரில் இருந்து இந்தியக் கடல் எல்லை வரையில் காணப்படும் மணல் தீடைகளுக்கு விரைவில் படகுச் சேவை

## உல்லாசப் பயணிகளைக் கவரும் திட்டமாம்



ආරක්ෂක අමාත්‍යාංශය
பாதுகாப்பு அமைச்சு
MINISTRY OF DEFENCE

29 November 20..

Secretary
Ministry of Tourism

COMMENCEMENT OF BOAT SERVICE TO VISIT SAND BANKS AT THALAIMANNAR

1. The Sri Lanka Navy (SLN) has informed this Ministry that sandbanks in the Gulf of Mannar are a potential tourist destination and there is no procedure/ action by the civil/ cooperate sector for the visit to the sand dunes at the movement in the Mannar area which hinders the interest of the tourist.

2. Furthermore, SLN proposed to operate boat service by the civilian/ cooperative sector was carried out by SLN and the following recommendations were forwarded.

a. Operate suitable boats with a licensed crew in compliance with existing guidelines (Guidelines enclosed herewith).
b. Boats can be launched either from Urumalai or Thalpadu pier as per the monsoon pattern.
c. Obtain necessary approval from relevant government agencies i.e. the Department of Wildlife Conservation, Sri Lanka Tourism Development Authority, Department of Coast Conservation and Coastal Resource Management, Government Agent Mannar, etc.
d. Arrange licensing by of Department of Wildlife Conservation similar to Whale watching projects and Pigeon island visits.
e. Issue necessary guidelines for pollution monitoring, waste management, prohibition of landing up to 3rd Island and launching locations by responsible government authorities.

3. Further, Monitoring Control and Surveillance (MCS) of the movements can be undertaken by SLN and assistance can be provided in case of emergency.

4. Therefore, it is kindly informed that this Ministry has no objection to the operation of the boat service subject to the above mentioned recommendations as this project is very viable under tourism promotion.

5. Submitted for favorable consideration and action deemed necessary, please.

D P WELAGEDARA RSP USP
Major General
Military Liaison Officer
for Secretary Ministry of Defence

Copies :
Secretary, Ministry of Environment
Commander of the Navy

**- நடராசா லோகதயாளன் -**

தலைமன்னாரில் இருந்து சுற்றுலாப் பயணிகளை கடலின் நடுவில் உள்ள ஆறு தீடைகள் (சிறிய தீவுகள் போன்ற மணல் திட்டுகள்) வரை அழைத்துச் செல்லும் படகுச் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சகல எற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. சேவை மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை – இந்திய நாடுகள் இடையே மிகவும் குறுகிய இடைவெளியை கொண்ட பிரதேசமாக தலைமன்னார் – இராமேஸ்வரம் ஜலசந்திப் பகுதி காணப்படுகின்றது. இங்கேயே சுற்றுலா மேம்பாட்டுத் திட்டமாக படகுச் சேவை ஆரம்பிக்க அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.




இதற்காக ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர், சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஆறு இருக்கைகள் கொண்ட 10 படகுகளை தலைமன்னார் பகுதிக்குத் தருவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவை கரையிலிருந்து கடல் பகுதிக்குள் சுமார் 13 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள 5 ஆவது தீடையை தாண்டி 6 ஆவது தீடைப் பகுதி வரையில் இடம்பெறவுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையில் உள்ள கடல் பகுதியில் 11 தீடைகள் உள்ளன. இவற்றில் 6 தீடைகள் இலங்கையின் கடல் எல்லைக்குள்ளும் 5 தீடைகள் இந்தியாவின் கடல் எல்லைக்குள்ளும் உள்ளன.

தலைமன்னாரிலிருந்து இலங்கையின் கடல் எல்லைக்குள் உள்ள தீடைகள் வரையில் இந்தப் படகு சேவை நடாத்தும் சாத்தியங்கள் தொடர்பாக நேரில் பார்வையிடுவதற்காக தலைமன்னார் கடற்படை முகாமில் இருந்து கடற்படை, மாவட்

தொடர்ச்சி▼

# தலைமன்னாரில் இருந்து இந்தியக் கடல் எல்லை வரையில் காணப்படும் மணல் தீடைகளுக்கு விரைவில் படகுச் சேவை

தொடர்ச்சி▲

டச் செயலகம், பிரதேச செயலகம், வன ஜீவராசித் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழு ஒன்று கடந்த 18 ஆம் திகதி அந்தத் தீடைகளுக்கு நேரிக் சென்றுள்ளது.

இக் குழுவினர் கடற்படையினர் தங்கியுள்ள 3 ஆவது தீடையிலும் இறங்கிப் பார்வையிட்டனர். அங்கே கடற்படையினரின் பாவனை அதிகம் என்பதனால் 3 ஆவது தீடையைச் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்ற முடிவிற்கி வந்துள்ளனர்.

இவ்வாறே 4 ஆவது தீடையில் அதிக வெளிநாட்டுப் பறவைகள் தங்கியிருப்பதனால் அங்கும் அனுமதிக்க முடியாது என்பதனால் ஏனைய 4 தீடைகளிற்கும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கும் சந்தர்ப்பம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த படகுத் திட்டத்திற்கான செலவீனமாக 445 மில்லியன் ரூபா திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் 250 மில்லியன் ரூபாவும், இரண்டாம் கட்டப் பணிகளிற்கு 195 மில்லியன் ரூபாவும் செலவு ஏற்படும் எனக் கூறப்பட்டது.

இதற்கான முன் பதிவுகள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. 2024 அக்டோபரில் விருந்தினர்களின் எண்ணிக்கை 465 பேராகவும் (அதில் வெளிநாட்டவர் 120 பேர் எனவும்) குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்ட மீளாய்விற்கு 2025 இல் 48 மில்லியன் ரூபா குறிப்பிடப்படுகின்றது. திட்டத்திற்கான ஆளணி 2025ஆம் ஆண்டு ஏப்ரிலில் 25 பேராக இருக்கும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இச் சேவையை நடத்த அனுமதியை வழங்குமாறு இறுதியாக 2025-01-20 அன்று சம்பந்தப்பட்ட நிறுவனம் மாவட்டச் செயலாளருக்கு எழுத்தில் கடிதம் வழங்கியுள்ளது.

இதற்காக 2025-03-09 அன்று சுற்றுலாப் பிரதி அமைச்சர் தலைமையில் மன்னார் மாவட்டத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இக் கலந்துரையாடலில் அழைக்கப்பட்ட தரப்புக்களில் வன ஜீவராசிகள் திணைக்களம் பங்குகொள்ளாத காரணத்தால் இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை.

சாதாரணமாக மீனவர்களே அனுமதி பெற்றே கடலிற்குச் செல்லும் நாட்டில், இத்திட்டத்தில் பிற நாட்டவர் கடலில் பயணிக்க இருப்பதனால், அதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி உண்டா என்று தேடிப் பார்த்தோம். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்றி திட்டம் முன் நகர்ந்திருக்க மாட்டாது என்கின்ற வகையில் தேடியபோது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாதுகாப்பு அமைச்சும் எழுத்து மூலமான அனுமதியை வழங்கியுள்ளது என்பது தெரிய வந்தது.

இந்த உல்லாசப் பயணத் திட்டம் நேரடியாக முழுமையாக இலங்கையின் மத்திய அரசினால் முன்னெடுக்கப்படுவதனால் இதன் மூலம் மாகாண சுற்றுலா அதிகார சபைக்கோ அல்லது உள்ளூராட்சி மன்றத்திற்கோ வருமானம் கிடைப்பது கடினம் என்றும் கூறப்படுகின்றது.


பூகோள ரீதியில் இந்திய எல்லை வரையில் இடம்பெறவுள்ள இத் திட்டத்தில் வெளிநாட்டவர்களும் சென்று வர முடியும் என்பதனால் இத்திட்டம் மீது இந்தியாவின் கழுகுப் பார்வை திரும்பும். அப்போதே இத் திட்டத்தின் இருப்பு எந்தளவிற்கு நெருக்கடிக்குள் அகப்படும் எனத் தெரிய வரும். ■



THE SANCTUM

THE SANCTUM AT A GLANCE...

- Project Description: Fully fledged 4-star (STA) hotel accommodation co… with restaurant, banquet facilities, swimming pool, private bar, private be… tour operations
- Laying of foundation: April 2018
- Project Cost Stage 1: Rs.250M (85% complete)
- Project Cost Stage 2: Rs.195M
- First booking: Oct 2024
- Total booking since: 137
- Total number of guests: 465
- Foreign nationals: 120
- Projected turnover 2025: Rs.48M
- Current employees: 9 Full time
- Projected employees (April 2025): 25 Full time
- Current review score on booking.com: 9.2/10
- Current google score: 4.7/5



THE SANCTUM

Government Agent
District Secretariat
Mannar

20th January 2025

To Whom It May Concern

RE: PERMIT TO BEGIN TOURISM ACTIVITIES IN TALAIMANNAR AREA

Dear Sir,

My name is Niroshan and I am a native of Talaimannar West, Mannar. I am a dual national of Sri Lanka and Australia. I migrated to Australia in 1997 and was raised and educated there and have held a string of successful business ventures before deciding to invest in Mannar starting from 2016.

I have invested over Rs.190 millions so far in Mannar island via my company Croos Enterprises Pvt Ltd and we have opened the very first, fully-fledged, purpose-built hotel in Talaimannar West called 'The Sanctum'. We opened in October 2024 and we still have about 25% of works left to finish. Upon completion, we are aiming for a 4-star rating from Tourism Authority. We are performing well above projected figures and expected to turn over between 25 – 30 million during 2025.

The purpose of this letter is to bring to your attention of some of the hurdles we are facing as a responsible tourism services provider.

1. We are currently in the process of obtaining purpose-built boats to take tourists to visit Adam's bridge while complying with all relevant departmental guidelines which we have obtained however we are facing some problems with the local Coast Guard who seems to be unreasonable. We need written permission to take both local and foreign tourists to Adam's Bridge area.
2. As part of our plan to promote tourism in the area, we are planning to offer kite surfing lessons by licensed instructors and therefore we need unhindered access to the waterways while taking all necessary care and responsibilities. We are currently facing infrastructure related issues, such as road access issues.
3. We have currently leased the 'Talaimannar Beach Park' facilities from the Pradesha Sabha and we plan to have water sporting such us Jet ski, Jet boating, Tubing, Surfing, Body boarding, and fishing charters.
4. We also plan to offer wildlife tours on quad bikes through the local forest area, showcasin… the local flora and fauna.

+94 7437 33747 | bookings@thesanctum.lk | www.thesanctum.lk
Beach Road, Talaimannar West, Mannar 41000, Sri Lanka

# அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட பெண்கள், குழந்தைகளுக்கு விலங்கு போடவில்லை

## மத்திய அரசு விளக்கம்



சட்டவிரோதமாக தங்கியிருந்த இந்தியர்களை அமெரிக்கா நாடு கடத்தும்போது பெண்கள், குழந்தைகளின் கைகளில் விலங்கு போடவில்லை என்று நாடாளுமன்றத்தில் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன்படி அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களை அவரவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வருகிறார். அதன்படி முறையான ஆவணங்கள் இன்றி தங்கியிருந்த இந்தியர்களையும் அமெரிக்கா இராணுவ விமானத்தில் திருப்பி அனுப்பியது. அப்போது இந்திய பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரின் கை, கால்களில் விலங்கிட்டு நாடு கடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கு எதிர்க்கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் இதுகுறித்து உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் நேற்று எழுத்து பூர்வமாக பதில் அளித்தது. அதில் குறிப்பிடுகையில்,

கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டபோது இந்தியர்கள் பலர் தாய் நாடு வந்தனர். அவர்களுடைய கை, கால்களில் விலங்கிட்டு அழைத்து வந்ததாக புகார் எழுந்தது. இது குறித்து அமெரிக்க அரசின் கவனத்துக்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் உடனடியாக கொண்டு சென்று கண்டனத்தை பதிவு செய்தது. அதன்பிறகு பெப்ரவரி 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் தாய்நாடு வந்தடைந்தனர். அவர்களுக்கு குறிப்பாக பெண்கள், குழந்தைகளின் கை, கால்களில் விலங்கிடவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் உறுதியாக தெரிவித்தனர். இதை இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் நாடு கடத்தப்பட்டு இந்தியா வந்தடைந்தவர்களிடம் நேரடியாக விசாரணை நடத்தி உறுதி செய்யப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தும்போது பாதுகாப்பு காரணங்களுக்காக கை, கால்களில் விலங்கிடுவது கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. அந்த விதிமுறைகளின்படிதான் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களை நாடு கடத்தும்போது அமெரிக்க அரசு விலங்கிட்டு அனுப்புகிறது.

எனினும், இந்திய பெண்கள், குழந்தைகளின் கை, கால்களில் விலங்கிடப்படவில்லை. இவ்வாறு மத்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. விசா முடிந்த பிறகு அல்லது சட்டவிரோதமாக குடியேறிய குற்றத்துக்காக கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை 388 இந்தியர்கள், அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டு தாய்நாடு வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.

# 297 தொல்பொருள்கள் அமெரிக்காவிலிருந்து மீட்பு



இந்தியாவில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 588 தொல் பொருட்களில், 297 பொருள்கள் அமெரிக்காவில் இருந்து கடந்தாண்டு இந்தியா வந்துள்ளன என மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் கஜேந்திர செகாவத் கூறியுள்ளார்.

அவர் மாநிலங்களவையில் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில்,

“பழங்கால பொருள்களின் சட்டவிரோத விற்பனையை தடுக்க இந்தியா – அமெரிக்கா இடையே கலாச்சார சொத்துக்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. நாட்டை விட்டு இதுவரை 588 தொல்பொருள்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன. இவற்றில் 297 பொருள்கள் கடந்தாண்டு அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பியது.

இதேபோல் யுனெஸ்கோ, இன்டர்போல் ஆகிய சர்வதேச அமைப்புகளுடன் தேவைக்கேற்ப இந்தியா இணைந்து செயல்படுகிறது.” என்றார்.



# திருப்பதி தேவஸ்தானத்தில் இந்துக்களுக்கு மட்டுமே பணி

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உறுதி

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தனது பேரன் தேவான்ஷ் பிறந்த நாளை முன்னிட்டு, தனது குடும்பத்தாருடன் ஏழுமலையான் கோயிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

இதனை தொடர்ந்து, பேரன் தேவான்ஷ் பிறந்த நாளை முன்னிட்டு, திருப்பதி தேவஸ்தானத்தின் எஸ்.வி. அன்னதான அறக்கட்டளைக்கு சந்திரபாபு நாயுடு 44 லட்சம் ரூபாவுக்கான காசோலையை தேவஸ்தான அறங்காவலர் பி.ஆர். நாயுடுவிடம் வழங்கினார்.

பத்மாவதி விருந்தினர் மாளிகையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“திருப்பதி ஏழுமலையான் கோயில் என்பது பல நூறு ஆண்டுகளாக இந்து பக்தர்களின் உணர்வுகளோடு பின்னிப்பிணைந்த ஒரு கோயிலாகும். என்னை அலிபிரியில் நடந்த வெடி குண்டு சம்பவத்திலும் ஏழுமலையான் தான் காப்பாற்றினார்.

திருமலையில் புனித தன்மையை சீர்குலைக்கும் நிகழ்வுகள் நடத்த அனுமதிக்க மாட்டோம். அலிபிரி பைபாஸ் சாலையில் மும்தாஜ் ஹோட்டல் கட்ட வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும். மேலும், இந்துக்கள் அல்லாதவர்கள் திருப்பதி தேவஸ்தானத்தில் பணியாற்ற அனுமதி இல்லை. இது இந்துக்களின் மனநிலையை பாதிக்கும் செயலாகும். 7 மலைகளும் ஏழுமலையானின் சொத்தாகும்.” என்றார்.



# ஹெஸ்பொல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல்

காசா மீதான தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து லெபனானில் செயல்பட்டு வரும் போராளிக் குழுவான ஹெஸ்பொல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருவதாகச் சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், நேற்று காலை லெப னானில் இருந்து வடக்கு இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்ட போது அதற்குப் பதிலடி கொடுக்கப்பட்ட தாக இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில், ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலிய நகரமான மெதுலா மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ் ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது.

ஏழு வார போர் நிறுத்தம் முடிவடைந்த நிலையில், போர் நிறுத்தம் நீடிப்பு தொடர்பாகப் பேச்சுவார்த்தை தொடர்ந் தும் நடைபெறவில்லை.

இந்தநிலையில், காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதலைத் தொடங்கியுள்ள நிலையில் இந்த தாக்குதல் இன்னும் அதிகரிக்கப்படும் எனவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.



# சட்டவிரோதமாக குடியேறியவர்களின் சட்டப்பாதுகாப்பு ரத்து செய்யப்படும்



## ட்ரம்ப்பின் அதிரடி தீர்மானம்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக் கப்பட்டு வருகிறது.

அதன்படி சட்டவிரோதமாக அமெரிக் காவில் குடியேறியுள்ள 5.32 லட்சம் பேருக்கான சட்டப்பாதுகாப்பை அமெ ரிக்க உள்நாட்டு பாதுகாப்பு சபை ரத்து செய்துள்ளது.

மேலும், அமெரிக்காவின் ட்ரம்ப் நிர் வாகம், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதிக்குள் தொடர்புடைய குடியே றிகளின் அனுமதிகளை ரத்து செய்து, அவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என கோரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங் கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 23.03.2025




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் காரணமாக வெற்றியும் திருப்தியும் அடையலாம்.

இன்று நீங்கள் தன்னிச்சையாகப் பணி புரிந்து பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் நிறைந்திருக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் முழு ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் இயந்திர கதியில் இயங்கும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். இன்றைய சவால்களை சந்திக்க நீங்கள் திட்டமிட்டு செயல் பட வேண்டும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக காணப்படாது.பணிகள் அதிகமாக காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்க்க இயலாது. குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

பொறுப்புகள் அதிகம் இருப்பதால் தேவையற்ற செலவுகள் காணப்படும். எனவே பணத்தை சாதுரியமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று தோல் எரிச்சலால் பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் வைப்பது நல்லது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. இன்று சிறிய விஷயங்களுக்குக் கூட எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். இன்று மனதில் சமநிலையோடு இருங்கள். இனிய இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். நிலுவையில் உள்ள பணிகளை திறமையாகக் கையாண்டு குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் வேறுபாட்டை வெளிப்படுத்துவீர்கள். உரையாடலின் போது கவனம் தேவை.

குடும்ப பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் பணம் செலவாகும்.அதிகரிக்கும் செலவுகளை சுமையாக உணர்வீர்கள்.

இன்று சளி, இருமல் பாதிப்பு காணப்படும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளைஎளிதில்அடைவீர்கள்.இன்றுஅதிர்ஷ்டம் சிறந்த பலனைத் தரும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

நீங்களும் உங்கள் துணையும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதன் மூலம் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு

நிதிநிலையில் ஸ்திரத்தன்மை காணப்படும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களின் தேக ஆரோக்கியம் மற்றும் ஆற்றல் காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். நிறைய வாய்ப்புகள் காணப்படும். இன்றைய நாளை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இன்று திருப்தி நிறைந்து காணப்படும்.

நீங்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்து உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியாக உணர்வீர்கள். இருவரும் தரமான நேரத்தை இணைந்து செலவழிப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். குடும்ப நலத்திற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் வலிமையாகவும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் மனதில் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இந்தப் போக்கை நீங்கள் சமாளிக்க வேண்டும். கடினமான சூழ்நிலை காரணமாக இன்று சுமையான நாளாக உணர்வீர்கள்.

இன்று பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய கவனமாகப் பணியாற்ற வேண்டும். சிறப்பாக திட்டமிடுவதன் வெற்றி சாத்தியப்படும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் ஆரோக்கியமான உறவு முறை காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று கண் எரிச்சல், முதுகுவலி, மற்றும் கால் வலி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.




இன்று கடினமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்கள் முயற்சி மற்றும் சிறப்பாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம்.

பணியிடத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். சிறந்த பலனைக் காண நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படலாம். இருவரும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள தவறுவீர்கள்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.




இன்று வருத்தத்துடன் காணப்படுவீர்கள். உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை இருப்பதால் அமைதியாக இருப்பது நல்லது. சமாளித்து அமைதியாக இருக்க வேண்டும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

சவாலான பணிகள் காணப்படுவதால் ஓய்வெடுக்க நேரம் காணாது. எனவே திட்டமிட்டு உங்கள் பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று குடும்பத் தேவைக்காக பணம் செலவு செய்வீர்கள். பொறுப்புகள் அதிகம் காணப்படுவதால் செலவுகள் அதிகமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.03.2025




இன்று உங்கள் இலக்குகளை அடைவதில் வெற்றி பெறுவீர்கள். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். நீங்கள் இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறனில் திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள்.

உங்களிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது. என்றாலும் நம்பிக்கையுடன் செயல்படுங்கள். நேர்மறை கண்ணோட்டம் இன்று மிகவும் அவசியம்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளில் தாமதங்களை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையிடம் பேசும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கம் உருவாக இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலை சிறப்பாக காணப்படாது. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை சேமிக்க இயலாது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம்.




இன்றைய கடினமான சூழ்நிலையை சமாளிக்க உங்களுக்கு பொறுமை தேவை. எந்தவித இழப்பும் ஏற்படாத வகையில் திட்டமிட வேண்டும். இன்று உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் இலக்குகளை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கியவர்களிடம் நல்ல உறவு முறையைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இனிமையான நாளாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் காரணமாக உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# யோஷிதவுடன் சென்ற சிலர் நடத்திய தாக்குதலில் களியாட்ட விடுதி பாதுகாப்பு உத்தியோகத்தர் காயம்



யோஷித ராஜபக் ஷவுடன் சென்ற சிலர் நடத்திய தாக்குதலில் கொழும்பு யூனியன் பிளேஸ், பார்க் வீதியிலுள்ள இரவு களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் காயமடைந்துள்ளார்.

யோஷித ராஜபக்ஸ மற்றும் அவரது மனைவியுடன் இந்தக் குழுவினர் நேற்று அதிகாலை இரவு களியாட்ட விடுதிக்கு வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யோஷித ராஜபக் ஷவும் அவரது மனைவியும் இரவு களியாட்ட விடுதி வளாகத்திற்குள் நுழைய முற்பட்ட போது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவு களியாட்ட விடுதிக்குள் நுழையும் போது கைகளில் அடையாளம் காண்பதற்கான பட்டியை அணியுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக இரவு களியாட்ட விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியாலையில் சிகிச்சை பெறுகின்றார்.

சம்பவம் தொடர்பாக கொம்பனித் தெரு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.